முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் போற்றி – அவர் வழியில்

# மக்கள் பணி - கழகப் பணி தொடர உறுதி ஏற்போம்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!



**சென்னை, ஜீன் 4 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கலைஞர் வழியில் மக்கள் பணி - கழகப் பணியாற்றுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.**

அது வருமாறு: தந்தை பெரியாரின் வழியில் மானமிகு சுயமரியாதை போராளியாய், பேரறிஞர் அண்ணா வழியில் மொழியுரிமை, மாநில உரிமைகள் காத்த தமிழினத் தலைவராய் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் போற்றுவோம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளில் கழகத்தலைவர் அவர்கள் வழியில் மக்கள் பணி, கழகப் பணி தொடர உறுதியேற்போம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!




தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே வேலை வாங்கி தருவதாக இளம்பெண்ணை ஏமாற்றி கூட்டு பாலியல் கொடுமை செய்ததாக த.வெ.க. நிர்வாகிகள் இருவர் கைது. குளிர்பானத்தில் மயக்க மருந்து கலந்து கொடுத்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

**எந்த அமைச்சரிடம் வேலை வாங்கித்தருவதாக ஏமாற்றினார்கள்?**

**யார்_அந்த_அமைச்சர்?**

த.வெ.க. ஆட்சியில் கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு

# தவணை முறையில் சம்பளம் பட்டுவாடா - வட்டார வளர்ச்சி அதிகாரி அறிவிப்பு!

## காரசார வாக்குவாதம் - பரபரப்பு!

கோவை, ஜூன் 4 –

த.வெ.க. ஆட்சியில் கோவை மாவட்டம், சூலூர் ஒன்றியம், சுல்தான் பேட்டை ஊராட்சியில் உள்ள 20 கிராம ஊராட்சிகளின் செயலாளர் மற்றும் அலுவலக உதவியாளர், வாட்டர் மேன் ஆகியோருக்கு தவணை முறையில் தான் சம்பளம் வழங்க முடியும் என வட்டார வளர்ச்சி அதிகாரி (BDO) தெரிவித்துள்ளார். இதனால் ஊராட்சி செயலாளர்கள் வட்டார வளர்ச்சி அலுவலரை முற்றுகையிட்டு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த காலங்களில் கிராம ஊராட்சியில் உள்ள செயலாளர் உள்ளிட்ட அலுவலக பணியாளர்களுக்கு மாதம்தோறும் 1ம் தேதி சம்பளம் தருவது வழக்கம். 1ம் தேதி விடுமுறை என்றால் அதற்கு முந்தைய நாளே இதுவரை சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 2 பஞ்சாயத்துகளுக்கு மட்டுமே சம்பளம் தர முடியும் என வட்டார வளர்ச்சி அலுவலர் கலாராணி தெரிவித்துள்ளார். இது ஊராட்சி செயலர்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் ஊராட்சிகளில் பணிகள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஊராட்சி செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக ஊராட்சி செயலாளர்கள் கூறுகையில், சுல்தான் பேட்டை ஊராட்சியில் 20 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன. மாதம் முதல் தேதி சம்பளம் வழங்கி வந்த நிலையில் தேர்தல் சமயத்தில் புதிதாக வந்த வட்டார வளர்ச்சி அலுவலர் கலாராணி மொத்தத்தில் அனைத்து நடைமுறையையும் மாற்றி குளறுபடி செய்து வருகிறார். தினம்தோறும் அலுவலகத்திற்கு வராத நிலையில் பல்வேறு பணிகள் நிலுவையில் இருக்கிறது. இந்நிலையில் ஊராட்சி செயலாளர்களுக்கும் ஒரே நாளில் சம்பளம் தர முடியாது என அலைபேசி மூலம் (குறுஞ்செய்தி) தகவல் அனுப்பியுள்ளார்.

அதன் படி ஜுன் 2ம் தேதி அன்றைக்கு கம்மாளப்பட்டி, அய்யம்பாளையம், ஜல்லிபட்டி பாப்பம்பட்டி, ஜே.கிருஷ்ணாபுரம்

ஆகிய கிராம ஊராட்சி செயலாளர்களுக்கும், 3ம் தேதி தாளக்கரை, செஞ்சேரி புத்தூர், அப்பநாயக்கன் பட்டி, கள்ளப்பாளையம், போகம்பட்டி போன்ற ஊராட்சி செயலாளர்களுக்கும், 4ம் தேதி வடவேடம்பட்டி, குமார பாளையம், மலைப்பாளையம், செலகரிச்சல் ஊராட்சி செயலாளர்களுக்கும் 5ம் தேதி வதம் பச்சேரி, பூரண்ட பாளையம், இடையர்பாளையம், வாரப்பட்டி, வடவள்ளி ஊராட்சி செயலாளர்களுக்கும் 8ம் தேதி பச்சாபாளையம் கிராமத்திற்கும் 9ம் தேதி கள்ளப்பாளையம் கிராமத்திற்கும் என சம்பள வவுச்சர்கள் கையெழுத்திடப்படும் என வட்டார வளர்ச்சி அதிகாரி கலாராணி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட தேதிகளில் அந்தந்த ஊராட்சி செயலாளர்கள் சம்பள பட்டியல்கள் மற்றும் ஐடி, ஜிஎஸ்டி ஆகிய படிவங்களில் கையொப்பம் பெற்றுக்கொள்ள வேண்டும் என வாட்ஸ் அப் மூலம் தகவல் அனுப்பியுள்ளார். இந்த குறிப்பு களை அவரவர் டைரியில் குறித்து வைத்துக்கொண்டு அந்த அந்த நாட்களில் மட்டுமே வர வேண்டும். அன்றைய தினம் மட்டுமே கையொப்பம் பெற வேண்டும். மற்ற வவுச்சர்களுக்கு வேறு நாட்களில் கையெழுத்திட்டு தரப்படும் என அனைத்து ஊராட்சி செயலர்களுக்கும் வாட்சப் மூலம் தகவல் அனுப்பியுள்ளார். 1ம் தேதி

சம்பளம் வரும் என எதிர் பார்த்து இருந்த ஊராட்சி செயலாளர்கள், அலுவலக உதவியாளர்கள் வாட்டர் மேன் போன்ற பணியாளர்கள் இதனால் பெரும் சிரமத் திற்கு ஆளாகின்றனர்.

இது தொடர்பாக விளக்கம் கேட்க அனைத்து ஊராட்சி செயலாளர்களும் சுல்தான் பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று காலை முதல் வெகுநேரம் காத்திருந்தனர். நீண்ட நேரமாகியும் BDO கலாராணி வராததால் மாலை வரை காத்திருந்தனர். தொடர்ந்து, மாலை 4 மணியளவில் அலுவலகத்திற்கு வந்த வட்டார வளர்ச்சி அலுவலரை முற்றுகையிட்டு, ஊராட்சி செயலாளர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து அங்கு பரபரப்பான சூழல் நிலவியது. புதிய ஆட்சி அமைந்த முதல் மாதத்திலேயே ஒழுங்காக சம்பளம் தராமல் அலைக்கழிக்கும் வட்டார வளர்ச்சி அதிகாரி (BDO) செயலை கண்டிப்பதாக ஊராட்சி செயலர்கள் தெரிவித்துள்ளனர்.

# மைக்செட்டிங்!

"பத்து நிமிடம் பேசுவதற்கு
பக்காவா
எழுதிக் கொடு"

"பத்து நாளாவது
நான்
மனப்பாடம்
செய்யணும்"
"பஞ்ச் டயலாக் முக்கியம்"
"எங்க சிரிக்கணும்
எங்க கோபப்படணும்

எங்க கண்ணை கசக்கணும்
எங்க மூக்கை சொறியணும்

எல்லாமும் கச்சிதமா இருக்கணும்"...

கட்டளையிட்ட
மாதிரியே சரியா
எழுதிக் கொடுத்தாச்சு ..

பேசி
முடித்துவிட்டு
வந்தவர்
எழுதியவரை
கூப்பிட்டு
எல்லாம் சரி

"நான் பத்து நிமிடம் பேசுவதற்கு
தானே
ஸ்கிரிப்ட்
கேட்டேன்"

"நீ இருபது நிமிடத்துக்கு
எழுதித் தந்திருக்கே"

கோபப்பட்ட
தலைவரிடம்
பணிவோடு
சொன்னார்
அந்தப் பரிதாப
எழுத்தாளர்...

"நான் பத்துநிமிடம்
பேசத்தான்
உரையை தயாரித்துத் தந்தேன்"

"படிக்கும் போது
காற்றில் பேப்பர் பறந்து
கீழே விழுந்து விட்டால்
என்னாவது
என்று

பாதுகாப்புக்காக
உரை



எழுதப்பட்ட
பக்கத்தை
ஒரு ஜெராக்ஸ்
எடுத்து
உடன் வைத்திருந்தேன்"..

"நீங்க அதை
கவனிக்காம
ஒரே உரையை
இரண்டு தடவை
வாசிச்சுப்புட்டீங்க"

"அதனால தான்
பத்து நிமிஷம்
இருபதாகிப்
போச்சு...
நான் என்ன
பண்றது" ....

ஆம் இதுதான்

மூதறிஞரும்
பேரறிஞரும்
கலைஞரும்
முழங்கிய மேடைகளின்
இன்றைய
பரிதாப நிலை இதுதான்!



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆதிதிராவிட நலக்குழு அணி சார்பில் திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி நகரத்தில் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு, கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழா மாநில ஆதிதிராவிட நலகுல அணி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகள் அன்னதானம் கழக மூத்த மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கினார் உடன் நகர கழக செயலாளர் ஜி.ஆர். திருமலை, மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, காஞ்சனா சுதாகர், ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், நகர் மன்ற துணைத் தலைவர் க. ஸ்ரீதர், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி நிர்வாகிகள் ஏ.விமல் ஆனந்த், வி.தணிகாசலம், பா.ராமானுஜம், பி.கே.இ.கபிலன், கே.கேசவன், ப.அன்பு, ஜி.ஆசைதம்பி, அ.ஞானசேகர், ஜெரோத்கிங்ஸ்லி, எல்.வெங்கடேசன், சு.அழகிரி, வார்டு செயலாளர் பழனி உள்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்



திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி கழக கொடி ஏற்றி 1000பேருக்கு அறுசுவை உணவினை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்கினார். இதில் குறிஞ்சி எஸ்.கணேசன், சாந்திபக்தன், எம்.வி.குமார், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன், த.கார்த்திகேயன், டி.சி.வி. மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம். ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், எஸ்.பாஸ்கர், பி.எஸ்.சைலஸ், ஆர்.ரஜினிபாபு, ஒய்.ரஜினிநந்தி, ஆர். டில்லி, டி.டி.எம்.பாபு, அ.அப்துல் சலிம், வி.பழனிவேல், கே.கார்த்திகேயன், ம.ஜெயராமன், ம.எத்திராஜ், ப. சந்தாணகிருஷ்ணன் மற்றும் மாவட்ட, பகுதி அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் திருவுருவப்படத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் அத்திப்பட்டு ஊராட்சி சார்பில் கிளைக் கழகச் செயலாளர் அத்திப்பட்டு எம்.டி.ஜி.கதிர்வேல் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அரசு பள்ளியில் 10ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு குளிர்சாதனப் பெட்டி, கிரைண்டர், மிக்ஸி உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டன. நிர்வாகிகள் உடன் மு. பகலவன், கே.வி.உமாமகேஸ்வரி, ப. செ.குணசேகரன், ஒன்றிய செயலாளர் ஏ.ஆர்.டி.உதயசூரியன், முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து.தமிழரசன், உள்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 103–வது பிறந்தநாள் முன்னிட்டு திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மாவட்ட அவை தலைவர் கே.திராவிட பக்தன் தலைமையில் ஒன்றிய செயலாளர் கா அரிகிருஷ்ணன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி. ஜி. ராஜேந்திரன், கலந்துகொண்டு பொதுமக்களுக்கு வழங்கினார் உடன் மாநில விவசாய அணி இணை செயலாளர் ஆர்.டி இ. ஆதிசேஷன், நிர்வாகிகள் பி.கே. நாகராஜ், கே. ஏ மதியழகன், கே. செங்குட்டுவன், பி. ஆர். பிரபாகரன், பொன் பாண்டியன், கமலக்கண்ணன், நந்தகுமார், கொப்பூர் திலீப் குமார், மோகனசுந்தரம்,ஆர்.ராம்கி, கார்த்திக்மணி, மணிகண்டன், ராஜேந்திரகுமார், டில்லி, பாலசுப்ரமணியம், ஏ.கே. சத்யா, ரமணன், லோகநாயகி, பாபு, முத்து, ராம்கி, ராமதாஸ்,ராமு, மகேஷ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்